# ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
# எக்கோஸ் இந்தியா

மெ 2009 | தனிப்பட்ட உபயோகத்திற்காக | மலர் - 2 இதழ் 3



வணக்கம் பல!

அன்பார்ந்த பாபூஜி மஹராஜின் பிறந்த நாள் விழா, பரோடாவிலும், மற்றும் இத் திருநாட்டின் எல்லா மையங்களிலும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. அப்யாசிகளின் ஆன்மீக தாகத்தை இவ்விழா தணித்திருக்கும் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. மாஸ்டரின் இவ்வருட புதுப்பரிசான Whispers from the Brighter World - A Second Revelation என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. இது நம்மால் நினைவில் கொள்ளத்தக்க, மனதால் உணரத்தக்க, மற்றும் நம் வாழ்வுடன் ஒன்றத்தக்க அறிவியல் புதையலாகும்.

இந்த இதழ், மாஸ்டரின் நாடு தழுவிய விரிவான பயணக்குறிப்புகள், பயிற்சி நிகழ்ச்சிகள், திறந்த வெளி கருத்தரங்குகள், வெவ்வேறு மையங்களில் நடைபெற்ற நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக்கல்வி முறை (VBSE) மற்றும் ரெய்ச்சூர் ஆசிரமத்தின் "ஒளி மையம்" என்ற பகுதியையும் உள்ளடக்கியது.

அன்புடன்

பதிப்பாளர் குழு



## உலகளாவிய பிரார்த்தனை

இரவு 9 மணி பிரார்த்தனை, பல அப்யாசிகளால் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இப் பிரார்த்தனை மிக முக்கியமான ஒன்றாகும். இது, அதிர்வு நிலை மூலம், அப்யாசிகளின் உள்ளங்களை மென்மையாக ஒன்றுபடுத்தக்கூடியது. இதை புறக்கணித்தல் கூடாது. இது செயற்கரிய செயலா என்ன? இதை மனதில் கொள்வது புத்திசாலித்தனமாகும். எல்லா சகோதர, சகோதரிகளும், தெய்வீக மாஸ்டரை பின் பற்றுகிறார்கள் என்று சில நிமிடங்கள் சிந்தித்திருப்பது மிஷனுக்கு செய்யும் சேவையாகும்.

-- பாபூஜி மஹராஜ்

# மாஸ்டரின் பயணக்குறிப்புகள்

## கொல்கத்தா

ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ஏற்றுக்கொண்ட வடஇந்திய பயணத்திற்குப்பின், மாஸ்டர், இந்தூரிலிருந்து மும்பை வழியாக பிப்ரவரி 20ம் நாள் கொல்கத்தா வந்தடைந்தார். அவர், சகோ. அஜய் பட்டரின் "தெய்வீக அநுபூதி" (DIVINE BLISS) என்னும் இல்லத்தில் தங்கியிருந்தார். அடுத்த நாள் அவர் பெரும் நேரம் கணினியிலேயே செலவழித்தார். இந்த வயதிலும் அவர் இப்படி கணினியில் பணி செய்வதை பார்க்க மிக ஆச்சரியமாக இருக்கிறது. 22ம் தேதி அவர் கரக்பூர் சென்று 2வது CREST (Centre for Research Sadhana & Training)ன் கட்டுமானப்பணியை பார்வையிட்டார். முதலாவது CREST பெங்களூரில் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிறது. அவர் அங்கு சத்சங்கம் நடத்திய பின் கொல்கத்தா வழியாக 24ம் தேதி சென்னை வந்தடைந்தார்.






## சென்னை

நீண்ட நாள் வட இந்திய பயணத்திற்குப்பின், மாஸ்டர் சென்னையில் தங்கினார். அதற்கு முன் சத்கோலில், "ஒளி உலகத்திலிருந்து மென்குரல்கள்" - 2வது தொகுப்பு (Whispers from the Brighter World - A Second Revelation) என்ற புத்தகம் ஏப்ரல் 30ம் தேதி வெளியிடப்போவதை அறிவித்தார். மார்ச் 1 ம் தேதி அதைப் பற்றி மறுபடியும் பேசுகையில் அவர்,

"இப் புத்தகங்கள் சகஜ மார்க்கத்தின் பைபிள் போன்றவை. முதலாவது பாகத்தை ஒருவர் அதற்கு உரிய கவனத்தோடு படித்திருந்தால், அச்செய்திகள் வேறு உலகத்திலிருந்து வந்தவை என்பதை உணர முடியும். ஆகையால் இதை ஸ்ருதி என்று அழைக்கலாம். ஸ்ருதி என்பது அறிவிக்கப்பட்ட அறிவாகும். அது கேட்டதினாலோ, சிந்தித்ததாலோ, புத்திசாலித்தனத்தாலோ, அல்லது எந்த மானுடராலும் எழுதி வைக்கப்பட்டதோ அல்ல. பாபூஜி மஹராஜ் தெய்வீக மகான். இப்புத்தகத்தை வாங்க இவ்வளவு பணம் கொடுக்க வேண்டுமா என யோசிக்காதீர்கள்" எனக்கூறினார்.

மாஸ்டர் பொதுவாக அப்யாசிகளுடன் பேசும்போது, பாபூஜி மஹராஜின் செய்திகள் எல்லோரையும் சென்று அடையவேண்டுமே என்ற கவலை அவருக்கு இருப்பதை, உணர முடிந்தது. ஒரு அப்யாசியிடம் கூட இப்புத்தகம் இல்லாமலிருக்க கூடாது என அவர் விரும்புகிறார். இவ்விதம் பணம் நல்ல முறையில் செலவழிக்கப்படுகிறது என அவர் கூறினார். தான், சத்சங்கத்திற்கு முன் இப்படி பேசியது, மிகவும் அரிதானது என அவர் உரைத்தார்.

## பூனே

மாஸ்டர், மார்ச் 12ம் தேதி பூனே வந்தடைந்தார். ஏராளமான அப்யாசிகள் அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர். மஹாராஷ்ட்ராவின் பல மையங்களிலிருந்து சுமார்

1700 அப்யாசிகள், பன்ஷேத்திலிருக்கும் SMSF புத்துணர்ச்சி முகாமில், அடுத்த சில நாட்களில் வந்து குழுமினர். மார்ச் 13 ம் தேதி, மாஸ்டர் சத்சங்கம் நடத்திய பின் சில பஜனைப்பாடல்கள் பாடப்பெற்றன. மார்ச் 14ம் தேதியன்று, அப்யாசிகள், தியானம், அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், மாஸ்டரின் பேச்சுக்களை ஒளி, ஒலி தகடு மூலம் கண்டு கேட்டு ரசித்தல் முதலியவற்றில் ஈடுபட்டனர். மாஸ்டர் 15ம் தேதி பேசும் பொழுது, இம் மாதிரி கூட்டங்களில் அப்யாசிகள் மனமொத்த குழு, நண்பர்கள் குழாம் அமைத்து கூடிப்பேசுவது, வம்புபேசுவது போன்றவற்றில் மென்மேலும் ஈடுபடுவதால், சகஜமார்க்க நியதிக்கும், பயிற்சிமுறைக்கும் சிறிதளவே நேரம் ஒதுக்குவதாக மனம் வருந்தினார்.

இந்த பேச்சுக்குப்பிறகு, குழந்தைகளின் நிகழ்ச்சிகளை கண்டு ரசித்தார். மதியம் 2:30 மணிக்கு அவர் முகாமிலிருந்து கிளம்பினார். இந்த பயணத்தில் அவர் பலரை பிரசெப்ட்டராக்கினார். பெருமளவில் அப்யாசிகளை சந்தித்தார்.







ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
Master's Tour
மெ 2009
தனிப்பட்ட உபயோகத்திற்காக
மலர் - 2 இதழ் 3

## பன்வெல் / மும்பை





மாஸ்டர், மார்ச் 15ம் தேதி பன்வெல் ஆசிரமம் வந்தடைந்தார். யுவ சகோதரிகள் பாரம்பரிய உடை அணிந்து, அவரை வரவேற்றனர். பயணம் மிக சோர்வு கொடுத்த போதிலும், அவர் மாலை 5 மணிக்கு, மும்பை மற்றும் சுற்றுப்புற மையங்களிலிருந்து வந்திருந்த சுமார் 1000 அப்யாசிகளுக்கு, சத்சங்கம் நடத்தினார். அதன்பின் மொட்டை மாடியில் உலாவினார். அவர் “பசுமை மண்டலத்தை” மேலிருந்து பார்த்து ரசித்தார். பிறகும் அவர் மொட்டைமாடியில், நிலவொளியில் அப்யாசிகளுடன் அளவளாவிக்கொண்டிருந்தார்.

மார்ச் 16ம் தேதி, அதிகாலை 5:45 மணி அளவில், மொட்டைமாடியில் உலாவிய பின், அப்யாசிகளுடன் காஃபி அருந்தினார். 9 மணிக்கு சத்சங்கம் நடைபெற்ற பின், பஜனைப்பாடல்கள் பாடப்பெற்றன. காலை நேரத்தில் அவர் “பசுமை மண்டலம்” சென்று ஒரு மாமரத்தின் கீழ் அமர்ந்தார். அவர் தடையின்றி அமர ஒரு அப்யாசி மரத்தின் கிளையை சிறிது மேல் நோக்கி வளைத்தார். அதற்கு மாஸ்டர், 'அப்படி செய்யாதீர்கள். அதை விட்டுவிடுங்கள். அது மிக மென்மையாது. நாம் இயற்கைக்கு தலை வணங்க கற்றுக்கொள்ளவேண்டுமென' உரைத்தார்.

பெண்களைப்பற்றி பேசும் பொழுது, அவர்கள் எப்பொழுதுமே, குறிப்பாக இந்திய பெண்கள், கஷ்டப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள், அவர்கள் அடுத்தவர்களை சார்ந்திருப்பதே அதற்கு முக்கிய காரணம் என கூறினார். அவர் “பசுமை மண்டலத்தில்” இருந்து திரும்பும்பொழுது, குழந்தைகளின் நன்னடத்தையைப் பாராட்டி, ஒவ்வொருவருக்கும் இனிப்பு வழ்ங்கினார். பிறகு ஒரு மருத்துவருக்கு பதிலளிக்கையில், மாஸ்டர், நிலையான நினைவில் பணியைச்செய்தால், பலன் பல லட்சம் மடங்கு சிறப்பாக அமையும் எனக்கூறினார். அவர், 99.9% கேள்விகள் ஆசையினால்தான் பிறப்பதாகக் கூறினார். அவர், பாபூஜி மஹராஜை மேற்கோள் காட்டும் பொழுது, சரியான செயலைச் செய்ய மாஸ்டரின் அனுமதி தேவையில்லை என்றும் தவறான செயலைச் செய்ய மாஸ்டரின் அனுமதி கிடைக்காது எனவும் கூறினார். இரவு உணவிற்குப்பின் மாஸ்டர் மொட்டைமாடியில் அமர்ந்து ஒரு திரைப்படம் பார்த்தார். அப்யாசிகள் மிகுந்த ஒழுங்குடன் நடந்துகொண்டதால், மாஸ்டர் குடிலுக்கு வெளியே, அவர்களுடன் நீண்ட நேரம் அமர்ந்திருந்தார். அப்யாசிகளுக்கு இது ஒரு பாடமாகவே அமைந்தது மட்டுமன்றி, மாஸ்டருக்கு தனிமையை அளிக்கும் அதே நேரம், தன் சுய கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ளவும் அவருடைய பிரசன்னத்தில் நீண்டநேரம் இருக்கவும் உதவியது.



## ராய்பூர்

மாஸ்டர் மார்ச் 17ம் தேதி சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள ராய்பூரை வந்தடைந்தார். சுமார் 1200 அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். உலக அமைதி, இணக்கமான, அமைதியான, இன்பமான வாழ்க்கை முறை முதலியன அமைய வேண்டுமாயின், பாபூஜி மஹராஜ் வலியுறுத்திய, இரவு 9 மணி பிரார்த்தனை, மிகவும் முக்கியமானதொன்று என்றும் இதை விட்டால் உலக மக்கள் ஒன்று பட வேறு வழியே இல்லை என்றும் மாஸ்டர் கூறினார். மார்ச் 18ம் தேதி காலை மாஸ்டர் அமலேஷ்வர் சென்றார். அங்கு மிஷனுக்கு சொந்தமான 6.5 ஏக்கர் நிலத்தில் சத்சங்கம் நடத்தியபிறகு, தியான மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார். அச்சமயம் அவர், சகஜ மார்க்கத்தின் மாஸ்டர்கள் எல்லோரும் வந்திருந்து, விழாவை அன்புடன் ஆசீர்வசித்ததை உணர்ந்ததாகக் கூறினார்.

19ம் தேதி காலை 9 மணிக்கு சத்சங்கம் நடந்தது. சிறுவர், சிறுமியர் சின்ன சின்ன பொருட்களை தயார் செய்து விற்ற தொகையுடன், தங்கள் கைச்செலவுக்கு பெற்றோர் கொடுத்த பணத்தையும் ஆசிரம கட்டுமானப்பணிக்காக மாஸ்டரிடம் அளித்தனர். .மாஸ்டர் அதை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். அச்சமயம் பேசிய அவர், பெரியவர்களும் தங்கள் அனாவசிய செலவுகளைக் குறைத்துக்கொண்டால், உன்னத நோக்கத்திற்காக செலவழிக்க பொருளும், மனமும் இருக்குமென உரைத்தார்.

## கொல்கத்தா



மாஸ்டர் மார்ச் 20ம் தேதி கொல்கத்தா வந்தடைந்தார். மறு நாள் காலை தியான மண்டபத்தில், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே வந்து, சத்சங்கம் நடத்தினார். அவர் பேசும் பொழுது, அப்யாசிகள் பொருள் சார்ந்த நல் வாழ்வு வேண்டி அவரிடம் வருவதாகவும், ஆன்மீக வளர்ச்சி பெற வேண்டி வருவதில்லை எனவும் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

“உங்களைப்போல், இருவர் அல்லது மூவர் மட்டுமே ஆன்மீகப் பாதையில் இன்னும் போய்க்கொண்டிருக்கிறீர்கள், ஏனெனில், நான் உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறேன். மற்ற அப்யாசி சகோதரர்கள் என்னை பொருட்படுத்துவதே கிடையாது. அவர்கள் எப்பொழுதுமே என்னிடமிருந்து பெறவேண்டியே வருகின்றனர். அவர்கள் முறையான தியானப்பயிற்சி செய்து வருவாரேயாயின், ஒரு அமர்விலேயே இந்த பிரபஞ்சம் முழுவதும் கொடுக்க சித்தமாயுள்ளேன். ஆனால் அவர்கள் என்னிடம் கொணர்வதோ, தங்களின் துயரங்கள், நோய்நொடிகள் மற்றும் என் மீது கொண்டிருக்கும் கோப தாபங்கள் மட்டுமே” -- பாபூஜி மஹராஜ்

பார்த்தீர்களா! பாபூஜி மஹராஜ் எவ்வளவு மன வேதனையுடன் பேசியிருப்பார். அவர் ஒளி உலகத்தில், தனது மாஸ்டரை, எவ்வாறு எதிர் கொண்டிருப்பார்? ஏனெனில், கட்டுப்பாட்டோடு வைத்திருக்க வேண்டியதற்கு பதிலாக, அவர், அப்யாசிகளின் தேவையற்ற, ஆன்மீக வளர்ச்சிக்கு உதவாத மற்ற வேண்டுதட்கெல்லாம் செவி மடுத்தார், என்று கூறினார். மாஸ்டர் 23ம் தேதி சென்னைக்கு புறப்பட்டார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
Master's Tour

மெ 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 3



## விசாகபப்பட்டினம், ஆந்திர பிரதேசம்

மாஸ்டர், மார்ச் 23ம் தேதி சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் வந்தடைந்தார். அவர் 6 வருடம் கழித்து, இந்த மையத்திற்கு விஜயம் செய்கிறார். சுமார் 100 அப்யாசிகள் அமைதியாக நின்று, விமான நிலையத்தில் அவரை வரவேற்றனர். ஆசிரமத்திற்கு அருகிலுள்ள ஒரு விருந்தினர் விடுதியில், மதிய உணவருந்திய பின் சிறிது நேரம் ஓய்வெடுத்தார். "சகஜ மார்க்க ஆன்மீக ஸ்தாபனத்தின்" (Sahaj Marg Spirituality Foundation) பெயரில் 9.09 ஏக்கர் நிலம் பதிவு செய்தார். விசாகப்பட்டினத்திலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள இந்த இடத்தில், அப்யாசிகளுக்காக ஒரு குடியிருப்பு அமைக்க திட்டமிடப்படுகிறது. மாஸ்டர் மாலை 4:30 க்கு, ஆசிரமத்தில் சத்சங்கம் நடத்தினார். இதில், 3000க்கும் மேற்பட்ட அப்யாசிகள் கலந்து கொண்டனர். அதற்கு பின் பேசிய அவர், சகஜ மார்க்கத்தின் முழுமையான மற்றும் அடிப்படை பயிற்சிமுறை பற்றி பாபூஜி மஹராஜின் கருத்துக்களை முன் வைத்தார். அவர், அப்யாசிகள் இன்னும் சமயச் சடங்குகள் செய்வதை கண்டித்தார். அப்யாசிகள் சகஜ மார்க்க முறையை மட்டுமே ஒழுங்காக கடைப்பிடிக்கும்படி வலியுறுத்தினார். நகரத்தை விட்டு தூரத்திலுள்ள ஒரு பண்ணை வீட்டில், மாஸ்டர் இரவைக் கழித்தார். 26ம் தேதி காலை 10 மணிக்கு சென்னை வந்தடைந்தார்.

## திருச்சி

மாஸ்டர், ஏப்ரல் 5ம் தேதி திருச்சி வந்தடைந்தார். வெவ்வேறு மையங்களின் சுமார் 300 அப்யாசிகள், அவரை விமான நிலையத்தில் வரவேற்றனர். மாஸ்டர் அவர்களைக்கண்டு மகிழ்ச்சி அடைந்தார். அவர் "ஜானகி பண்ணை"க்குச் சென்றார். அங்கு ஒரு வார காலம் தங்கினார். ஏப்ரல் 12ம் தேதி காலை 7:30 மணிக்கு, திருச்சி தியான மண்டபத்தில், சத்சங்கம் அளித்தார். பிறகு, அவர் திண்டுக்கல் வழியாக, திருப்பூருக்கு புறப்பட்டார். போகும் வழியில், திண்டுக்கல்லில் ஒரு அப்யாசி வீட்டிற்கு காலை 11 மணி அளவில் வருகை புரிந்தார். அங்கு, திண்டுக்கல், சின்னாளப்பட்டி, வத்தலகுண்டு அப்யாசிகள் அவரைக்காண மிக மகிழ்ச்சி அடைந்தனர். மாஸ்டர், 40 வருடத்திற்கு முன்னாலேயே தொடங்கப்பட்ட சின்னாளப்பட்டி மையம், மறுபடியும் கடந்த சில மாதங்களில் புனரமைப்பு செய்யப்பட்டதை நினைவு கூர்ந்து, சின்னாளப்பட்டி அப்யாசிகளுடன் மகிழ்ந்திருந்தார். பயணம் போகும் வழியில், தாராபுரத்தில் காத்திருந்த சுமார் 125 அப்யாசிகளை சந்தித்து அளவளாவினார்.

## திருப்பூர்

ஏப்ரல் 12ம்தேதி பிற்பகல் 1:30 மணிக்கு, மாஸ்டர் திருப்பூர் வந்தடைந்தார். நீண்ட பயணத்தினாலும், மதிய உணவிற்கு நேரமாகிவிட்டதாலும், சிறிது சோர்ந்து காணப்பட்டார். ஒரு அப்யாசி கவலைப்பட்டு வினவ, மாஸ்டர், நாம் மகிழ்ச்சியாக இருக்கும்பொழுது, சாப்பாடு இல்லாவிட்டாலும், தேக நலன் குறைவுற்றாலும் கூட, அவை ஒரு பொருட்டாக இருக்காது எனக் கூறினார். திங்களன்று, கேரளா உள்ளிட்ட வெவ்வேறு இடங்களிலிருந்து வந்திருந்த 2500 அப்யாசிகள், டைமண்ட் ஜுப்ளி பார்க், திருப்பூரில் கூடினர். மாஸ்டர் தினமும் சத்சங்கம் அளித்தார். மாஸ்டர் ஏப்ரல் 15ம்தேதி, உடுமலைப்பேட்டையில் வரவிருக்கும் தியானக் கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த மையம் 20 வருடங்களாக இயங்கி வருகிறது. ஒரு அப்யாசி வினவியதற்கு, மாஸ்டர், தான் TTK குழுமத்தில் பணி புரிந்தபோது, இவ்வூருக்கு பல தடவை வந்திருப்பதாக குறிப்பிட்டார். மாஸ்டர் எங்கெல்லாம் செல்கிறாரோ, அங்கெல்லாம் மையமும் பிரசெட்டரும் உருவாகிவருவது கண்கூடு. திருப்பூரில் மாஸ்டர் ஒளித்தகட்டில் இரண்டு பிரசங்கங்களைப் பதிவு செய்தார். அவை, இந்த வருடம் வெளியிடப்படும். மாஸ்டர் ஏப்ரல் 18ம் தேதி காலை 10:30க்கு, கிருஷ்ணகிரிக்கு கிளம்பினார். ஈரோட்டில் மதிய உணவிற்குப்பின், 4:30 மணிக்கு கிருஷ்ணகிரி வந்தடைந்தார். அடுத்த நாள், தியானக்கூடத்தை திறந்து வைத்து பேசினார். சுமார் 800 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.





## பெங்களூரு

மாஸ்டர், பரம்தாம் ஆசிரமத்திற்கு, ஏப்ரல் 19ம் தேதி வந்து சேர்ந்தார். இந்த ஆசிரமம் குடியிருப்பு பகுதியிலிருப்பதால், பெங்களூரு மையம், அப்யாசிகளை வெவ்வேறு குழுக்களாகப்பிரித்து, வெவ்வேறு நாட்களில் பரம்தாம் ஆசிரமத்திற்கு வருகை புரியுமாறு ஏற்பாடு செய்திருந்தது.


20ம் தேதி, மாஸ்டர் 5 திருமணங்கள் நடத்தி வைத்தார். அவர் நலமாகவும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார். இங்கும் அவர் ஒளித்தகடு பதிவு செய்தார். பரம் தாமில் வசிக்கும் எல்லா அப்யாசிகளையும், அவரவர் அறையில் சந்தித்து ஆனந்தம் பெறச்செய்தார்.






## புதுவெளியீடுகள்

### வாய்ஸ் ரியல் (VOICE REAL) (குஜராத்தி)





இப்புத்தகம் 1981ம் வருடம் முதன்முதலாக வெளியிடப்பட்டது. இது பாபூஜி மஹாராஜின் பேச்சுக்கள், எழுத்துக்கள், மற்றும் பரிமாற்றங்களின் தொகுப்புக்களை உள்ளடக்கியது. நம் அன்புக்குரிய பாபூஜி மஹாராஜ், இதில் ஆன்மீகத்தில் தன் உள்ளார்ந்த உணர்வுகள் பற்றி சகாக்களுக்கும் பொதுமக்களுக்கும் எடுத்து உரைத்திருக்கிறார்.

### சகஜ மார்க்கம் - கையேடு




இக்கையேடு, ஆன்மீக ஆர்வலர்களுக்கு, சகஜ மார்க்க தியானம் பற்றியும், பயிற்சி முறை பற்றியும், ஒரு தெளிவான முன்னுரை அளிக்கிறது. சகஜ மார்க்கத்தில் சேர விரும்பும் ஆற்றலுள்ள நபர்களுக்கு, இது ஒரு தரமான கையேடாக விளங்குகிறது. இது சகஜ மார்க்கத்தின் முக்கியமான அம்சங்களையும், உள்ளூரில் தொடர்பு கொள்ளவேண்டிய நபர்களையும் பற்றி விளக்குகிறது. சகஜ மார்க்கத்தைப் பற்றிய கூட்டத்தொடரில், இதை வினியோகிக்கலாம். ஏற்கனவே ஆங்கிலத்தில் வெளியான இந்த கையேடு, ஹிந்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், பெங்காலி மற்றும் அஸ்ஸாமி மொழிகளில், 2009 மே மாதம் வெளியிடப்படும்

### நிலையான நினைவு - ஏப்ரல் 2009




இந்த பதிப்பில் கீழ்கண்டவை இடம் பெற்றிருக்கின்றன.

நாம் மாறினால் உலகத்தை எவ்வாறு மாற்ற முடியும் --- மாஸ்டரின் பேச்சு

உறவுகளை பற்றிய கட்டுரை -- சகோ. P.R.கிருஷ்ணா

நன்றியை பற்றிய தலைப்புக்கட்டுரை

போபால் ஆசிரமம், மற்றும் மலம்புழா, கேரளா, புத்துணர்ச்சிமையத் திறப்புவிழா பற்றிய செய்திக்குறிப்பு.

### அப்யாசிகளுக்கான பயிற்சித்திட்டம் -- ஹிந்தி

ஷாஜஹான்பூரில், மாதத்தின் இரண்டாவது வாரம், சாதனா பயிற்சி திட்டம் நடைபெறுகிறது. செவ்வாய் மாலை 4 மணிக்கு ஆரம்பித்து, ஞாயிறு 12:30 மணிக்கு முடிவடைகிறது.
சமீபத்தில் நடைபெறவுள்ள திட்டத்தின் அட்டவணை பின்வருமாறு

1. 7-12 ஜுலை 2009
2. 3-9 ஆகஸ்ட் 2009
3. 6-13 செப்டம்பர் 2009
4. 6-11 அக்டோபர் 2009

சகோ. பிரபாத் குமார், p.o. Bankey Ganj, Lakhimpur Kheri (pin : 262801)

Email :prabhatksrcm@gmail.com என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்

### நம் அன்பிற்குரிய மாஸ்டரின் 83வது பிறந்த நாள் விழா

“பிறந்த நாள் விழாவைக் கொண்டாட தயாராகுங்கள். அது, நம் சகோதர, சகோதரிகளின் உள்ளத்தில் என் மகனின்பால் மென்மேலும் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. அவர் அன்பு செய்யப்படுகிறார். அவருடைய செயல்கள், நம் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு பலன் தந்து கொண்டிருக்கின்றன. அவர் புவியில் பிறந்த இப் புனித நாள், நம் மிஷனின் சரித்திரத்தில் நினைவு கூறத்தக்க ஒன்றாகும். அது, ஒளிவீசும், மதிப்புமிகுந்த நாளாகும். இந்த விசேட புருஷரின் காலத்தில் நாம் இருப்பதையெண்ணி மீண்டும் மீண்டும் சந்தோஷப்படுங்கள்”

--- ஒளி உலகத்திலிருந்து பாபூஜி மஹராஜ்

மாஸ்டர், மிகுத கருணையுடன் தனது 83ம் பிறந்த நாளை, திருப்பூர், இந்தியாவில் கொண்டாட அனுமதி அளித்ததை, நன்றி கலந்த மகிழ்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். மிஷனின் வலைத்தளம் “http:\\www.srcm.org/members/24july/index.jsp”ல் அழைப்பிதழை காணலாம். விழா பற்றிய புதுப்பிக்கப்பட்ட செய்திகள், பதிவு, சொகுசு விடுதி (comfortdorm) முதலியன பற்றி இத் தளத்தில் பெறலாம். கூடுமானவரை ஜுன் 15,2009 க்கு முன்னதாகவே பதிவு செய்யுமாறு அப்யாசிகள் கோரப்படுகிறர்கள்.

### SMRTI உறுப்பினர் குழாம்

சகஜ மார்க்க ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் SMSF ன் ஒரு கிளையாக நிறுவப்பட்டது. கீழ்கண்டவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆராய்ச்சி நிறுவனர் — Dr.K.S. பாலசுப்ரமணியன் (sanskritkannan@yahoo.com)

பயிற்சி உபகரணங்கள் திரட்டுதல்
லலிதா ஸ்ரீநிவாசன்

ஸ்காலர்களின் பயிற்சி திட்டம்
டாலி நிகொலாய்

பிரசெப்டர்கள் பயிற்சி திட்டம்
N.பிரகாஷ்

இந்திய இயக்கங்கள் — N. பத்மநாபன் (padu@srcm.org)

யுவ நிகழ்ச்சி---(AMC பயிற்சி)
S.பிரகாஷ்

சிறுவர் பயிற்சி திட்டம்
V.மதுமதி & லியா ரிச்

அப்யாசி பயிற்சி திட்டம் (ஆரம்பம்)
Col. A. ராமகிருஷ்ணன்

அப்யாசி பயிற்சி திட்டம் (நியதி)
அனுசுயா ராமசந்திரன்

நன்னெறி அடிப்படையிலான ஆன்மீகக்கல்வி
சீதா குஞ்சிதபாதம் & ரங்கராஜு மாதுரி

கட்டுரை போட்டி
புனித் லால்பாய், லலிதா ராஜகோபால் & மிசால் மேத்தா

பயிற்சியாளர் பயிற்சி திட்டம்
லிஸ் கிங்ஸ்நார்த்








உத்தராகண்ட் மண்டல VBSE ஆசிரியர் பயிற்சியை நோக்கமாகக் கொண்டு, சத்கோல் மையம், 3 தின நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. பங்கேற்ற சுமார் 40 அப்யாசிகள், பல்வேறு நன்னெறிகளை அடிப்படையாகக்கொண்ட கருத்துக்களை பங்கேற்றவர்களுக்கு எடுத்துரைத்தனர். இந்த நன்னெறிகளை தினசரி வாழ்க்கையில் எவ்வாறு செயல்படுத்துவது என்பது பற்றி விவாதிக்கப்பட்டது. நன்னெறிகளின் முக்கியத்துவத்தை மேலும் உறுதிப்படுத்த, கதைகள், செயல்முறைகள், விளையாட்டுகள், பரிசோதனைகள் போன்றவை சேகரிக்கப்பட்டன. VBSE பாடத்திட்டத்தைக் கற்றுக்கொள்ள, ஒரு நடைமுறை அணுகுமுறையாக இந்நிகழ்ச்சி அமைந்தது.

## ஆர்வமிக்க வருகை

அமெரிக்காவைச் சேர்ந்த, கலிபோர்னியா, அலியன்ட் பல்கலைக்கழகத்தின் உளவியல் பிரிவு மாணவர் குழு ஒன்று, ஜனவரி 5ம் தேதி, சென்னை, மணப்பாக்கம், பாபுஜி மெமோரியல் ஆசிரமத்திற்கு, வருகை புரிந்தது. சகஜ மார்க்கம், மற்றும் ஒழுக்க மனவியலில் அதன் தாக்கம் ஆகியவற்றைப்பற்றி நன்கு அறிந்து கொள்ள, அவர்கள் பயணப்பணியின் ஒரு பகுதியாக இந்த வருகை இருந்தது. முதலில், நமது அழகான ஆசிரமத்தையும், மற்றும் LMOIS கேம்பிரிட்ஜ் இன்டர்நேஷனல் பள்ளியையும் அம்மாணவர்கள் பார்வையிட்டனர். ஆசிரமத்தைச் சுற்றிக்காட்டிய நம் அப்யாசிகள், மாணவர்களின் பல வினாக்களுக்கும் விடையளித்தனர். பின்பு இருந்த கலந்துரையாடலின்போது, சகோ. A.P.துரை, சகஜ மார்க்கம் பற்றியும், அது உளவியல் மாணவர்களுக்கு எவ்வாறு மிகச்சிறந்த வகையில் உதவியாக இருக்கும் என்பது பற்றியும், சிந்தனையைத் தூண்டும் வண்ணம் ஆற்றிய தம் உரையில், பல கேள்விகளுக்கும் பதிலளித்தார். விருந்தினர்களுக்கு மதிய உணவு அளிக்கப்பட்டது. அற்புதமான நேரத்தை நம் ஆசிரமத்தில் அனுபவித்த மாணவர்கள், மேலும் பல மணி நேரம் தங்க விரும்புவதாகக் கூறினர்.

## MBA மாணவர்களின் மணப்பாக்கம் வருகை

சென்னை, தொரைப்பாக்கம், ISBR ஸ்கூல் ஆப்ஃ பிசினஸ் மாணவர்கள் 60 பேர், முதல்வர் சத்யப்ரியா, மற்றும் 3 ஆசிரியர்களுடன், மார்ச் 18ந்தேதி, மணப்பாக்கம், பாபுஜி மெமோரியல் ஆசிரமத்திற்கு வருகை புரிந்தனர். தன்னைத்தானே நிர்வகித்தல், நீதிநெறி, நல்லொழுக்கம், குருவின் தேவை, சகஜ மார்க்க சாதனை பற்றிய மாஸ்டரின் போதனைகளைப்பற்றி சகோ.A.P.துரை உரை நிகழ்த்தினார். ஆழ்ந்து கவனித்த மாணவர்கள், வினா-விடைநேரத்தில், தங்கள் எண்ணங்களைத் தெரிவித்தனர். அவர்கள் கருத்துக்கள், நேர்முகமாகவும், பாராட்டுக்குரியதாகவும் இருந்தன. முதல்வரும், ஒரு ஆசிரியரும், பயிற்சியைத் தொடங்கியுள்ளனர். அனைவருக்கும் எளிய, சுவையான உணவு வழங்கப்பட்டது. அடிப்படை அறிமுகப்புத்தகங்கள் கொடுக்கப்பட்டன. மேலும் உதவி தேவைப்பட்டால் வழங்கவும் உறுதி கூறப்பட்டது.



## VBSE நிகழ்ச்சிகள்

தமிழ்நாடு, தேனிமாவட்டம், நாடார் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 3 நாள் VBSE நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஸ்ம்ருதி ஒருங்கிணைப்பாளர் சகோ. சீதாகுஞ்சிதபாதம், கோயம்புத்தூர் சகோ. சுப்புலட்சுமி இருவரும் நிகழ்ச்சியை நடத்தினர். நன்னெறி சார்ந்த வாழ்க்கை, குணமும் மனப்பாங்கும், மன அழுத்தத்தை சமாளித்தல், தீர்மானமும் விடாமுயற்சியும், நன்னெறி, தலைமை தாங்கி நடத்தத் தேவையானகுணங்கள், மற்றும் வாழ்க்கையின் குறிக்கோள் போன்ற விஷயங்கள் விவரிக்கப்பட்டன. B.Ed. மாணவர்களுக்கு கூடுதலாக, ஆசிரியர்களின் பங்கு, மன அழுத்தக்கட்டுப்பாடு, போன்றவை தெளிவாக்கப்பட்டன. ஆசிரியப் பயிற்றுனர்களின் பங்கு, ஆசிரியர்களின் பங்கு, நன்னெறிகளை எவ்வாறு கடைப்பிடிப்பது, மன அழுத்தக்கட்டுப்பாடு, ஆசுவாசப்படுத்துதல், தியானம், குண உருவாக்கம், போன்ற விஷயங்கள் பற்றி, விரிவுரையாளர்களுக்குக் கூறப்பட்டன. ஆசிரியர், மாணவர்க்கு மட்டுமே இந்நிகழ்ச்சி திட்டமிடப்பட்டு இருந்தாலும், ஆசிரியரல்லாத மற்ற அலுவலர்களும், வாகன ஓட்டுனர்களும், ஒரு தனி நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். முதலில் அவர்களிடம் வெளிப்படையான தடை இருந்த போதிலும், இறுதியில், நிகழ்ச்சியால் அனைவருமே கவரப்பட்டனர். பெண்கள் கல்லூரியில் ஆண் ஓட்டுனர்களின் பங்கு, வாழ்க்கையின் நன்னெறிகள், ஆகியவை அவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட உரையாகும். பல செயல்முறைப் பயிற்சிகள், அனைவருக்கும் புதிய அனுபவமாகவும், பாராட்டத்தக்கதாகவும் இருந்தன.



## VBSE ஆசிரியர் பயிற்சி பெங்களூர்

மார்ச் 28-29, பெங்களூர், பனசங்கரி ஆசிரமத்தில், 2 நாள் ஆசிரிய மேம்பாட்டு பயிற்சிக்கூட்டம் நடைபெற்றது. முதல்நாள், VBSE இன் முக்கியத்துவத்தை எடுத்து கூறுவதைப் பற்றி, பங்கேற்றவர்கள் தெரிந்துகொண்டனர். VBSE யின் விரிவான அம்சங்கள், மற்றும் சகஜ மார்க்க போதனைகள் பற்றி எடுத்துக்கூறத் தேவையான, பேச்சாற்றலை வளர்த்துகொள்ளும் விதம் பற்றியும் கூறப்பட்டது. சுயசேவை புரிதலின் முக்கியத்துவம், சுயசேவகர்களின் சரியான மனப்பாங்கு, சிறப்பான மேடைப்பேச்சு, போன்ற விஷயங்கள் உரையாடப்பட்டன. பங்கேற்ற ஒவ்வொருவரும் ஒரு கருத்துரை வழங்கினர். மேடைப்பேச்சில் அனுபவம் உள்ள அப்யாசிகள், உதவி புரிந்தனர். வரும் வருடத்தில், ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் 5 நிகழ்ச்சிகள் நடத்தப் பொறுப்பேற்கவேண்டும் என்று கூறப்பட்டது.

## பிரிபெக்ட் பயிற்சி முகாம், மலம்புழா



கேரளா மலம்புழா ரிட்ரீட் மையத்தில் மார்ச் 14,15 தேதிகளில் மிகப் பயனுள்ள பிரிபெக்ட் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தமிழ் நாட்டிலுள்ள பல மையங்களிலிருந்தும், வேலூர், ஆரணி, பாண்டிச்சேரி, விழுப்புரம், ஓசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஹரூர், திருச்சி மற்றும் கரூர் போன்ற இடங்களிலிருந்தும், 37 பிரிசெப்டர்கள் இந்த முகாமில் பங்கேற்றனர். சத்யோதயம், பிரிசெப்ட்ர்கள் கைடு, விஸ்பர்ஸ் ப்ரம் ப்ரைடர் வோல்ட் (Whispers From Brighter World) ஆகியவற்றில் இருந்து அதிகமான குறிப்புகள் எடுத்து, கீழ்காணும் தலைப்புகளில் உரைகள் வழங்கப்பட்டன.

சகஜ மார்க்க கோட்பாடுகளும், பயிற்சியும் - சகோ. ராஜேஷ் ராத்தோட்.

பிரிபெக்ட்டின் பங்கு, பொறுப்பு மற்றும் செயல்முறைகள் - சகோ. N. பிரகாஷ்.

விஸ்பர்ஸ் ப்ரம் ப்ரைடர் வேர்ல்ட், ஒரு தெய்வீக பரிசு - சகோ. B. G பிரசன்னா கிருஷ்னா.

பிரிபெக்ட்டின் பணி, விளக்கங்கள் - சகோ. G. ராஜவேல்.

சகஜ மார்க்க குடும்பம் - சகோ. எழிலரசி

முடிவுரை - சகோ. காமாட்சி நடராஜன்

சகோ. ராஜகோபாலன் (ZiC, தமிழ் நாடு வடக்கு) கலந்துகொண்டு தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். நம் தன்மைமாற்றம் என்பது முக்கிய கருத்தாக இருந்தது அதுவே மற்றவர்களுடய மாற்றத்திற்கும் காரணம் ஆகும். நம்முள் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்காக நம் மனஉறுதியைப் (Will) பயன்படுத்தி, நம் பணிகளை ஒழுங்காக செய்தால், அதுவே நம் மாஸ்டருக்கு மகிழ்ச்சியைத் தரும் என்பது ஒருமித்த கருத்தாக இருந்தது.

ஏப்ரல் 5-ஆம் தேதி அன்று **போபால்** மையத்தில் நடந்த நிகழ்ச்சியில் இந்தோர் ஆசிரம பராமரிப்புக் குழு (Ashram Maintenance committee-AMC) தங்களுடைய அனுபவங்களை போபால் அப்யாசிகளுடன் பகிர்ந்து கொண்டனர். இரு வருடங்களுக்கு முன்பு ஆசிரமத்தின் சொத்துகளை நிர்வாகிப்பதற்காக மாஸ்டர் AMC-ஐ உருவாக்கினார். இந்தக்குழு ஐந்து நபர்களைக் கொண்டது. அதில் மண்டலப் பொறுப்பாளர், மையப் பொறுப்பாளர், ஆசிரம மேனேஜர் ஆகியோர் நிரந்தர உறுப்பினர்கள். AMC பற்றி அப்யாசிகள் தெரிந்து கொள்ளவும், ஆசிரம நிர்வாகப் பொறுப்பை AMCயிடம் ஒப்படைப்பது பற்றியும் இந்த நிகழ்ச்சி உதவியது. சகோ. ரமாகாந்த் அகர்வால், மற்றும் சகோ. ராஜேஷ் ராவேர்கர், குழு உறுப்பினர்களாகப் பணிபுரிந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

## சோலாபூர் ஆசிரமம்



29 மே 2008 அன்று, நகரத்திலிருந்து 5 கி.மீ தொலைவிலுள்ள அக்கல்கோல் ரோடு, சோலாபூர், மஹாராஷ்ட்ராவில் 1.5 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. 15 ஏப்ரல் 2009 அன்று, முதல்கட்ட வேலைகளான, வேலி, நீர் வசதி, மின்சாரம், வாட்ச்மேன் வீடு ஆகியவற்றுக்காக அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. காலை 6 மணிக்கு அப்யாசிகள் மிகுந்த ஆர்வத்துடன், ஆசிரமத்தில் கூடினர். 6.30 மணிக்கு சத்சங்கம் நடைபெற்றது. இதில் 60 அப்யாசிகள் கலந்துகொண்டனர்.

ஆசிரம நிலத்தை சமப்படுத்தி, தோட்ட வேலைகளும், மற்றும் நிலத்தை மேம்படுத்துவதற்கான வேலைகளை செய்வது ஆகியவற்றை, ஆசிரம நிலத்திற்காக வேலை செய்யும் வாய்ப்பாகக் கருதி அப்யாசிகள் மிக மகிழ்ச்சி அடைந்தனர்.

## கர்நாடகா தென்மண்டலம்

மண்டலப் பொறுப்பாளர் சகோ. சரத் ஹெக்டெ உட்பட மூன்று பிரிசெப்டர்களைக் கொண்ட குழு, தென் கர்நாடகாவிலுள்ள மல்நாடு பகுதியிலுள்ள, வளர்ந்து வரும் மையங்களிலுள்ள அப்யாசிகளைக் காண்பதற்கான சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். மார்ச் 27 கன்னட புதுவருடப்பிறப்பு அன்று, பெங்களூரிலிரிந்து கிளம்பினர். வழியில் தும்கூர், திப்தூர் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். கடூர் என்ற இடத்தை அடைந்தபோது, அங்கிருந்த ஒரு அப்யாசி குடும்பத்தினர், நீண்டகாலமாக பயிற்சி செய்து வருவதையும், பிரிசெப்டர் இல்லாத அந்த மையத்தில், மாஸ்டரை சார்ந்து இருப்பதையும் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டனர். சத்சங்கமும் தனிதியானமும் அவ்வப்போது பெறுவதற்காக அவர்கள் 40-70 கி.மீ பயணிக்கின்றனர். அக்குடும்பத்தின் வயதான தந்தை, வாழ்க்கையை நேர்நிலையான மனப்போக்குடன் காண்பதும், பார்வை இல்லாமலிருந்தும் ஒரு சிறிய கடை நடத்துவதும் மிக ஆச்சரியமாக இருந்தது.

ஷிமோகாவில் இரவு தங்கியபின், ஷிமோகா மாவட்டத்திலுள்ள ஹொசா நகரத்திற்குச் சென்றனர். சகோ. அனந்தராம் குடும்பத்தினர் சிட்டிங் எடுத்தனர். ஹம்சாவிலிருந்து ஒரு சகோதரி, குழுவினரைத் தன் இடத்திற்கு அழைத்தார். அவர் பிரிசெப்டர்களைக் கண்டு மிக மகிழ்ச்சியடைந்து, அவருடைய மூன்று மாதகால பயிற்சியினால் ஏற்பட்ட மாற்றத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர் மாஸ்டரைக் காண விருப்பம் தெரிவித்தார். தீர்த்தஹள்ளி, கொப்பா, மற்றும் சிறிய நகரங்களிலுள்ள அப்யாசிகளைக் கண்டு, இறுதியாக மாலை சிக்மகளூர் வந்தனர்.

கடைசி நாள், சிக்மகளூரில் சத்சங்கத்துடன் ஆரம்பித்தது. ஹாசனில் அப்யாசிகளைச் சந்தித்தபின், குழுவினர் பெங்களூர் வந்தடைந்தனர்.

பல பயிற்சி திட்டங்கள், கருத்துப்பரிமாற்ற கூட்டத்தொடர் முதலியன நாட்டின் பல்வேறு மையங்களில், கடந்த இரு மாதங்களாக நடைபெற்றன. இத்திட்டங்கள், ஒவ்வொரு மையத்தின் தனிப்பட்ட அப்யாசிகளின் சுயப்பயிற்சி அடைய ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது மட்டுமின்றி, சகஜ மார்க்கத்தை புதுக்கோணத்தில் அறியவும் உதவியது.

ராணிகேத் மையம், பிப்ரவரி 9ம் தேதியன்று "மாஸ்டருடன் உறவு" என்ற தலைப்பில் இளைஞர்களுக்காக ஒரு நிகழ்ச்சி நடத்தியது. பங்கேற்றவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டபின், மாஸ்டர் தங்களுடன் எவ்விதம் பிணைந்துள்ளார் என்பதைப்பற்றி பேசினர். ஒரு விளையாட்டு மூலமாக, சாதனா மற்றும் சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றிய 20 கேள்விகள் கேட்கப்பட்டன. இந் நிகழ்ச்சி சகஜ மார்க்கத்தை மேலும் புரிந்து கொள்ள உதவியது.

புது அப்யாசிகளுக்கான 2 நாள் பயிற்சி, மார்ச் 10-11 ம் தேதியன்று, உத்தராகண்ட், பிதோராகர் நகரில், நடைபெற்றது. மிகுந்த அளவில் அப்யாசிகள் கலந்துகொண்டனர். சகஜ மார்க்கத்தைப் பற்றிய முன்னுரை, பிரார்த்தனை, தியானம், சுத்தகரிப்பு, முதலியனவற்றின் விளக்கங்கள் இதில் இடம் பெற்றன. அதன் பின், நற் பண்புகளை வளர்த்துக்கொள்வது, சமூகத்தில் அப்யாசியின் பங்கு, பொது மக்களுக்கு சகஜ மார்க்கத்தைப்பற்றிய அறிவூட்டல் போன்றவை விவாதிக்கப்பட்டன. அப்யாசிகள் இந்நிகழ்ச்சியில், சுயமதிப்பீடு செய்துகொண்டனர். அவர்கள் 9 மணி உலகளாவிய பிரார்த்தனையில் பங்கேற்க உறுதி பூண்டனர்.



காசிப்பூர் மையம், பிப். 15ம் தேதியன்று, புது அப்யாசிகளுக்காக பயிற்சி முகாம் நடத்தியது. இதில், 60 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அவர்களின் உள்ளத்தில், சகஜ மார்க்க அடிப்படை அம்சங்கள் நன்று பதியுமாறு அறிவூட்டப்பட்டது. சகஜ மார்க்க அடிப்படைகளான பிரார்த்தனை, தியானம், சுத்தகரிப்பு பற்றி விளக்கப்பட்டது. அதன் பின் வினா விடை நிகழ்ச்சி நடைபெற்றது. நிலையான நினைவு பற்றிய மற்றொரு கூட்டத்தொடரில், 50 அப்யாசிகள் கலந்து கொண்டனர். நிலையான நினைவிற்கும், வெறும் யோசித்தலுக்கும் உள்ள வேற்றுமையை அறிந்து கொள்ள, இது உதவியது. வினா விடை நிகழ்ச்சியில், அப்யாசிகள் திறந்த மனத்துடன் விவாதித்தனர்.





குவாலியரிலிருந்து 70 கி.மீ தொலைவிலுள்ள தாட்டியா மையம், மார்ச் 29ம் தேதியன்று, "மையம் வளர்ச்சி பெற நான் எவ்விதம் பங்களிப்பேன்" என்ற தலைப்பில், ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்திருந்தது. இதில் 10 அப்யாசிகள் கலந்து கொண்டனர். நிலையான நினைவுடன், மிஷனுக்காக, தன்னார்வத் தொண்டாற்றினால் அது மற்றவர்களையும் ஊக்குவிக்கும். அதனால், மிஷனும் வளரும் என முடிவு செய்யப்பட்டது. பொருளுதவி மூலமும், நாம் மாஸ்டருக்கு நன்றி உடையவர்களாக இருப்போம் என அறியப்பட்டது.

குவாலியருக்கு அருகாமையிலிருக்கும் மற்றொரு மையமான சிவபுரியில், மார்ச் 22ம் தேதி, ஞாயிறு சத்சங்கத்தில் ஒழுங்காக கலந்து கொள்ளாத 23 அப்யாசிகளுக்காக, ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. பயிற்சிமுறை பற்றிய தெளிவின்மையே, இவ்வொழுங்கீனத்திற்குக் காரணமென அறியப்பட்டது. பிரசெப்டர்கள், அவர்களுடன் கூடிப்பேசி, அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். மாஸ்டரின் அருளினால், 10 அப்யாசிகள் மீண்டும் சாதனையை தொடர்ந்தனர். புது அப்யாசிகளுக்கு, முதல் 6 மாதமாவது போதுமான கவனிப்பு அளித்து, அவர்கள் சந்தேகங்களைப் போக்கி, அவர்கள் நிரந்தர அப்யாசிகள் ஆவதற்கு ஆவன செய்யவேண்டுமென உணரப்பட்டது.



மாஸ்டரின் பிப். 2009 விஜயத்திற்குப்பின், இந்தூர் மையம், புது அப்யாசிகளுக்காக ஒரு கூட்டம் நடத்தியது. சாதனையின் பல அம்சங்களும், சகஜ மார்க்க அடிப்படைக் கோட்பாடுகளும், விவாதிக்கப்பட்டன. பழைய, மற்றும் புதிய அப்யாசிகளுக்கிடையே கருத்துப்பரிமாற்றம் ஏற்பட்டது.

ஜெய்பூரில், மார்ச் 15ம் தேதி, மார்வாடி மொழியில் அரை நாள் கூட்டம் நடைபெற்றது. அப்யாசிகளின் அறிமுகத்துடன் தொடங்கிய இக்கூட்டத்தில், தியானம், சுத்திகரிப்பு, பிரார்த்தனை பற்றி விளக்கமளிக்கப்பட்டது. அதை தொடர்ந்து, வினா விடை நிகழ்ச்சியும், நடைபெற்றது. அவர்கள் தாய் மொழியான மார்வாடி மொழியில், நிகழ்ச்சி நடத்தியது இதுவே முதல் தடவை. சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகள், அடிப்படை கோட்பாடுகளை, தாய் மொழி மூலமாக நன்கு புரிந்து கொண்டதால், மிகவும் பாராட்டினார்கள். சுமார் 30 அப்யாசிகள் கலந்து கொண்டனர். 2 அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை, இம்மாதிரி நிகழ்ச்சி நடக்கவேண்டுமென விருப்பம் தெரிவித்தனர்.

ஆந்திரப்பிரதேசம், காகினாடாவை சார்ந்த திராக்ஷாராமம் என்ற கோவில் நகரத்தில், இப்பொழுது 35 அப்யாசிகள் உள்ளனர். அவர்களுக்காக, சகஜ மார்க்கத்தின் அடிப்படைக் கொள்கைகள், மற்றும் பயிற்சிமுறை பற்றி, மார்ச் 5ம் தேதி ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில், சகஜ மார்க்க கொள்கைகளைப்பற்றி நன்கு அறிந்து கொள்ளவும், பயிற்சியில் ஒழுங்குமுறையைக் கொணரவும் அறிவுறுத்தப்பட்டது. காகினாடாவின் மையப்பொறுப்பாளரால், மைய ஒருங்கிணைப்பாளர் சகோ.v.s.சிவராம் இல்லத்தில், இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இம்மாதிரி கருத்தரங்கு இங்கு நடப்பது இதுவே முதல் முறையாகும். இந்த கோவில் நகரத்தில் சகஜ மார்க்கத்தின் கதவுகள் திறந்து விட்டன என நம்புவோமாக!

**காசிபூர்** மையத்தில் ஏப்ரல் 9ந்தேதி நடந்த வரவேற்புக்கூட்டத்தில் சுமார் 30பேர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில், வாழ்க்கையின் உண்மையான குறிக்கோள், மனதை ஒழுங்குபடுத்துவதன் அவசியம், சமநிலை வாழ்க்கையின் முக்கியத்துவம் ஆகியவை பற்றிய சொற்பொழிவுகள் இருந்தன. உரைகளைத் தொடர்ந்து, வினா-விடைப்பகுதி நடந்தது. பார்வையாளர்கள் கேட்ட மிக உசிதமான கேள்விகளும், நிகழ்ச்சியை நடத்தியவர்கள் அளித்த உற்சாகமான பதில்களும், வரவேற்புக்கூட்டமானது, மிக பயனுள்ளதாக அமைந்ததைத் தெளிவுபடுத்தின.

**பெங்களூரு**, 'பரம்தாம்' ஆசிரமத்தில் மார்ச் 21தேதி, 'சகஜ மார்க்க தியானம்' என்ற தலைப்பில் ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. இது நவம்பர் 2008ல், ஆசிரம திறப்புவிழாவிற்குப் பிறகு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதல் பொது நிகழ்ச்சி ஆகும். ஒருவாரம் முன்பாக அனுப்பப்பட்ட அழைப்பிற்கு, சிறந்த ஆதரவு தந்து, சுமார் 80பேர் பங்கேற்றனர். தியானத்தின் அவசியம் பற்றிய சகோ.சுப்ரமண்யம் சங்கரன் அவர்களின் அறிமுக உரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. அதன்பின், பங்கேற்றவர்கள் அனைவரும், பத்து நிமிடங்கள் கண்ணைமூடி அமரும்படிகேட்டுக் கொள்ளப்பட்டனர். 'அமெரிக்க தினவாழ்வில் தியானமும், ஆன்மீகமும்' என்பது பற்றிய மாஸ்டரின் குறுந்தகடு ஒளிபரப்பப்பட்டது. அதையடுத்து, சகோ.சுப்ரமண்யம் பலவகையான கேள்விகளுக்கும் பதிலளிக்கும் வகையில் 'சகஜமார்க்க தியானம்' பற்றி விரிவாகப் பேசினார். பின்பு, பங்கேற்றவர்கள் சிறு குழுக்களாகப் பிரிந்து, அப்யாசிகளுடன் உரையாடி, சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர். நிகழ்வின் இறுதியில், பலரும் தியானம் தொடங்குவதில் ஆர்வம் காட்டினர்.



மார்ச் 9ம்தேதி, **குல்பர்க்கா**வில் உள்ள, பூஜ்ய தொட்டப்பா அப்பா பொறிஇயற்கல்லூரியில், ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 100 மாணவர்கள் கலந்துகொண்டனர். எடுத்துக் கொள்ளப்பட்ட தலைப்பு, 'மனதை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பூரணத்துவம்' என்பதாகும். டாக்டர்.கஜேந்திரசிங், மின் ஒளிப்படத்தின்துணையுடன், உரையாற்றினார். நிகழ்ச்சி முழுவதிலும், பூரண அமைதியும், ஆழ்ந்த டிரான்ஸ்மிஷனும் உணரப்பட்டது. இதை அடுத்து வினா-விடைநிகழ்ச்சி நடந்தது. 5 மாணவர்கள் தீவிர ஆர்வம் காட்டியுள்ளனர்.

மார்ச் 12ந்தேதி, SBMஅதிகாரிகள் சங்கத்தில், **ஹூப்ளி**மையம் ஒரு வரவேற்புக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தது. அதன்மூலம், தியானத்தின் பலன்களைப் பற்றிய விழிப்புணர்வைப் பரப்ப, ஒருநல்ல வாய்ப்பு அமைந்தது. சகோ.G.S.காமத், மற்றும் சகோதரி கீதா காமத் அவர்கள் மிஷன்பற்றியும், தியானம் மூலம் மன அழுத்தத்தை வெல்வது போன்ற பல விஷயங்கள் பற்றியும் உரையாற்றினார்கள். பங்கேற்பாளர்கள் மிஷனின் அறிமுகப் புத்தகங்களை வாங்குவதில் மிகுந்த உற்சாகம் காட்டினர்.

## மும்பை

மும்பை, மத்திய ரெயில்வே மின்பிரிவு பயிற்சி நிலையத்தில் பயில்வோருக்கு, சகஜ மார்க்க தியானம் பற்றி அறிமுகம் செய்ய, ஏப்ரல் 7ந்தேதி அங்கு ஒரு அரைநாள் பயிற்சிமுகாம் நடத்தப்பட்டது.

80 மாணவர்களும் மற்றும் நிலையத்தின் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். தினசரி வாழ்வில் ஆன்மீகம் மற்றும் தியானத்தின் அவசியம், முக்கியத்துவம் பற்றி சகோ. துஷார் ப்ரதான் விளக்கினார்.

சகஜ மார்க்க சாதனை, அதன் பல்வேறு அம்சங்கள் மற்றும் தனிநபரின் மாற்றத்திற்கு டிரான்ஸ்மிஷன் எவ்வாறு உதவுகிறது என்பது பற்றியும் சகோ. விஷ்வாஸ் டில்லு பேசினார். சகஜ மார்க்கம் பற்றி புதிய அப்யாசிகளுக்காக மாஸ்டர் உரையாற்றிய சிறிய வீடியோ காட்சி ஒன்றினை சகோ.ஸ்ரீதர் தோடா காண்பித்தார். இதனைத் தொடர்ந்து ஒரு வினா-விடைப்பகுதி நடைபெற்றது.

பார்வையாளர்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்ததால், ஆர்வமுள்ளவர்கள் அங்கங்கு இருக்கும் பிரிசெப்டர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதற்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டன. இனிவரும் பல்வேறு குழுக்களுக்கும், இத்தகைய பயிற்சிமுகாம் நடத்துமாறு, நிலையத்தின் ஆணையர்கள் கேட்டுக் கொண்டனர்.

## ரூர்க்கி

ரூர்க்கி ஆசிரமத்தில் மார்ச் 29ந்தேதி அன்று ஒரு வரவேற்புக்கூட்டம் நடைபெற்றது. நகரத்தின் முக்கிய இடங்களில் ஆசிரம பானர்கள் வைக்கப்பட்டதுடன், அப்யாசிகளின் நண்பர்கள், உறவினர்களுக்கு அழைப்பிதழ்களும் கொடுக்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சுமார் 150 பேர் பங்கேற்றனர். சகோ.ஞானேஷ்வர் சரீன் மற்றும் சகோ.சவ்வி உரை நிகழ்த்தி, அனைவரது வினாக்களுக்கும் விடை அளித்தனர். இதன்பின் பகலுணவு வழங்கப்பட்டது. பார்வையாளர்கள் அனைவரும் மிகவும் ஈர்க்கப்பட்டதுடன், சாதனை தொடங்குவதைப்பற்றி மேலும் அறிந்து கொள்ள ஆர்வம் காட்டியது இனிமையான ஒன்றாக இருந்தது. சுமார் 13பேர் பயிற்சி ஆரம்பித்துள்ளனர். பலத்தமழை இருந்தபோதிலும் நடந்த, இக்கூட்டத்தைப்பற்றிய செய்திகள் சில ஊள்ளூர் செய்தித்தாள்களில் வெளி வந்தன.

## சோன்வாடி, மகராஷ்டிரா

மகராஷ்டிரா, சோன்வாடியில் (ஔரங்காபாத்) பிப்ரவரி 24தேதி, புது அப்யாசிகளுக்கான நிகழ்ச்சியில், சோன்வாடி மற்றும் லசூரைச் சேர்ந்த சுமார் 40 அப்யாசிகள் பங்கேற்றனர். காலை நிகழ்ச்சி, சகஜ மார்க்கத்தின் அடிப்படைகள், 'பிரார்த்தனை மற்றும் தியானம்' பற்றிய சகோ. டாக்டர். கிர்கே அவர்களின் விரிவுரையுடன் தொடங்கியது. அதையடுத்து, சகோதரத்துவம் பற்றி சகோ. சௌஹானும், ராஜயோகம் பற்றி சகோ.சிட்டேயும் உரையாற்றினர். பகலுணவிற்குப்பின், சோன்வாடியில் இருப்பவர்களுக்கு ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் சகஜ மார்க்க தியானமுறை பற்றி விளக்கப்பட்டது. சில அப்யாசிகள், தங்கள் அனுபவங்கள் மற்றும் தங்களுள் ஏற்பட்டு இருக்கும் மாற்றம் பற்றியும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அனைவருக்கும் புரியும் வண்ணம், நிகழ்ச்சியானது, ஹிந்தியிலும், மராட்டியிலும் நடத்தப்பட்டது. 'சோன்வாடி பாட்ஷாலா' என்ற உள்ளூர் பள்ளியின் குழந்தைகளுக்காக, 1 மணிநேர நன்னெறி அடிப்படையில் ஆன்மீகக்கல்வி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 6 மணி சத்சங்கத்துடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## ஆந்திரப்பிரதேசம் - தெற்குமண்டலம்

கூட்டுச் செயலாளர் சகோ.A.P.துரை, மற்றும் மண்டலம்-Bயின் மண்டலப் பொறுப்பாளர் சகோ.கங்காதர் இருவரும் பிப்ரவரி 19தேதி, எம்மிகானூர் மற்றும் கர்னூல் ஆகிய இடங்களுக்குச் சென்றனர். எம்மிகானூரில் சுமார் 40 அப்யாசிகளிக்கு சகோ. துரை சத்சங்கம் நடத்தினார். அவர் அங்கு, சகோ. கங்காதர் குடும்பப் பொறுப்பில் உள்ள ஒரு ஆங்கிலப் பள்ளியைப் பார்வையிட்டார். சிறப்பான சீருடையில் 900 மாணவர்களும், பெண்கள் NCC குழுவினரும் இருந்தனர். அவர்களின் அணிவகுப்பையும், கூட்டுச்சபையின் நடவடிக்கைகளையும் சகோ. துரை பார்வையிட்டர். மாணவர்களுக்கான மாஸ்டரின் அறிவுரைகளை அவர் கூறியபோது, மிகுந்த கவனத்துடன் கேட்டுக்கொண்டனர். அப்பள்ளியில் மிஷனின் பிரார்த்தனையுடன் தொடங்கி VBSEஐ அறிமுகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது, பின்பு, சகோ.கங்காதரின் பூர்வீக இல்லத்தில் உள்ள மற்றுமொரு பள்ளிக்கு சகோ.துரை சென்றார். அங்கு 120 ஏழைக்குழந்தைகள் இலவசக்கல்வியும், உணவும் பெற்று வருகின்றனர்.





கர்நூலில் அவர் சுமார் 180 அப்யாசிகளிக்கு சத்சங்கம் நடத்தினார். உணவிற்குப்பின் நடந்த கலந்துரையாடல் மற்றும் வினா-விடை நிகழ்ச்சியில், அப்யாசிகளுக்குப் பல விஷயங்கள் தெளிவாக்கப்பட்டன. மாலை சத்சங்கத்தில் சுமார் 280 அப்யாசிகள் கலந்து கொண்டனர். அதன்பின் நடந்த வினா-விடைப்பகுதியில், மாஸ்டரின் போதனைகளின் அடிப்படையில் அவர்கள் கேள்விகளுக்கான பதில்கள், வழங்கப்பட்டன. மாஸ்டர், மற்றும் பிரிசெப்டர்களிடம் தொடர்புகொள்ளும் முறை, உலகவாழ்க்கையின் பிரச்சனைகள், மற்றும் வேதனைகளை எதிர்கொள்ளும் விதம், சுயசேவைபுரிதல், குழந்தைகள் மையம், மிஷனின் முக்கியமான புத்தகங்கள், மாதாந்திர முழுநாள் நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் போன்ற பல்வேறு விஷயங்கள் பேசப்பட்டன. இந்த அரை நாள் கலந்துரையாடலில் அப்யாசிகள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

## அப்யாசி பயிற்சி நிகழ்ச்சி, மும்பை

மும்பையில், புதிய அப்யாசிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகள் நடந்த பல இடங்களிலும் கிடைத்த வரவேற்பானது, அப்யாசிகளுக்கு அத்தகைய நிகழ்ச்சிகளின் தேவையை உணர்த்தியது. நியூபன்வேல், பாபுஜி மெமோரியல் ஆசிரமத்தில், 2 நாள் அடிப்படைப் பயிற்சி ஒன்று, பிப்ரவரி21-22ல், ஏற்பாடு செய்யப்பட்டது. மலேகானிலிருந்து வந்த, 2 அப்யாசிகள் உட்பட, 40பேர் பங்கேற்றனர்.

பிப்ரவரி 18-19 ஆகிய தினங்களில், மாஸ்டரின் மும்பை வரவினால், அப்யாசிகள் புத்துணர்வு பெற்றிருந்தனர். அதனால், பிப்ரவரி 21அன்று பயிற்சி நிகழ்ச்சி சத்சங்கத்துடன் மகிழ்வான மனநிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

முதல் நாள் சாதனாவின் அடிப்படைக் கொள்கைகள் விவரிக்கப்பட்டன. பார்வையாளர்கள் நன்கு புரிந்து கொள்ளும்வகையில், ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

வாழ்வின் குறிக்கோள், வழிகளும் முறைகளும், குரு, போன்ற தலைப்புகளில் குழு கலந்துரையாடல்கள் நடந்தன.

நிகழ்ச்சிக்கு முன்னுரையாக 'சத்யோதயம்' புத்தகம் வாசிக்கப்பட்டதால், அனைவர் எண்ணங்களும் ஒருமைப்பட்டு, கலந்துரையாடல் நல்லமுறையில் நடைபெற்றது. பின்பு, 'மாஸ்டர், மிஷன் மற்றும் நாட்குறிப்பு எழுதுதல்' பற்றிய கருத்துரை வழங்கப்பட்டது. அதன்பின், அப்யாசிகள், சுயசேவை, நாட்குறிப்பு எழுதுதல் போன்றவற்றில் ஈடுபட்டு அன்றைய நிகழ்வுகளை மனதில் ஈர்த்துக் கொள்ள முயன்றனர்.

இரண்டாவது நாள் சத்சங்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பின், நிரந்தர நினைவு, குறிக்கோள் மற்றும் வேகமாக முன்னேற வழிகள் பற்றி உரை நிகழ்த்தப்பட்டது. சகஜ மார்க்கத்தின் பத்து நியமங்கள் பற்றிய கலந்துரையாடலுடன், நிகழ்ச்சி முடிவடைந்தது.



## குழந்தைகள் முகாம், மும்பை

ஏப்ரல் 10-12 நடந்த சகஜ் கேளிக்கை முகாமில், 53 குழந்தைகள் பங்கேற்றனர். இது 9-13 வயதுள்ள குழந்தைகளுக்கான முகாம் ஆகும். ஏற்கனவே, மாஸ்டரின் வருகையினால் கிடைத்த உற்சாகத்துடன் இருந்த சுயசேவகர்கள், கேளிக்கைகள் நிறைந்த, நன்னெறி அடிப்படையிலான செயல்பாடுகளை திட்டமிட்டனர்.

குழந்தைகள், அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, விடாமுயற்சி, சந்தோஷம், மற்றும் தைரியம் என்ற 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ரெயில்வே அட்டவணை மூலம் ஒரு செயல்முறையைக் காட்டி, நாம் சேரும் இடத்தின் மீது எவ்வாறு கவனம் செலுத்தவேண்டும் என்பதை விளக்கினர். உணவின்பின், காற்றில் ஒலி எழுப்பும் விளையாட்டுக்கருவிகளை (wind-chimes) உருவாக்கி, தங்கள் கற்பனைத்திறனைக் காண்பித்தனர். தங்கள் உணவைத் தாங்களே செய்து கொண்டனர். கதை வாசித்தல், பின்பு கோ-கோ விளையாட்டுடன் நிகழ்ச்சி முடிவடைந்தது. இரவு உணவுக்குப்பின், குழந்தைகள், திறந்த மாடிக்குச் சென்று, தொலைநோக்குக் கருவி மூலம் நட்சத்திரங்களைக் கண்டு களித்தனர்.

ஏப்ரல்11அன்று, யோகப்பயிற்சி இருந்தது. பின்பு குழந்தைகள், உடம்பில் கயிறு கட்டிக் கொண்டு மாடியில் இருந்து கீழேவரும், சிலிர்ப்பூட்டும் விளையாட்டினை தேர்ச்சி பெற்றவர்கள் உதவியுடன் ஆடி மகிழ்ந்தனர். உணவின் பின் அந்த அனுபவம் பற்றி எழுதினர். பின்பு 'passing the parcel' விளையாட்டு இருந்தது. வாழ்க்கையில் நன்னெறிகள் பற்றிய மின் ஒளிப்படத்தை, குழந்தைகள் மிகுந்த கவனத்துடன் பார்த்தனர். பின்பு, சங்கீத நிகழ்ச்சியும், ஒரு குறும் படமும் இருந்தன.

ஞாயிறு காலை, குழந்தைகள், பசுமைநிறைந்த இடத்திற்குச் சென்று, இயற்கையின் அழகை ரசிக்கக் கற்றனர். VBSE அடிப்படையில் சில விஞ்ஞானப் பரிசோதனைகளை (உதாரணமாக-தேவை, விருப்பம் ஆகியவற்றை விளக்கும் செய்முறை) செய்து காட்டினர். பின்பு, பொதுஅறிவு, விஞ்ஞானம், புராணங்கள், சகஜ மார்க்க அடிப்படை, ஆகியவற்றில் நடைபெற்ற வினா- விடை நிகழ்ச்சியில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். உணவின் பின், பெற்றோர்களுக்கான 1மணி நேர நிகழ்ச்சி இருந்தது. அத்துடன் பயிற்சி முகாம் முடிவடைந்தது.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா
ஒளி மையங்கள்
மெ 2009 தனிப்பட்ட உபயோகத்திற்காக மலர் - 2 இதழ் 3

## ரெய்ச்சூர் ஆசிரமம், கர்நாடகா

பூஜ்ய ஸ்ரீ பாபுஜி மகராஜுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தில் உள்ள ரெய்ச்சூர் ஆசிரமமானது, மிஷனின் ஆரம்பகால கட்டிடங்களுள் ஒன்றாகும். நகரத்தின் நடுவே அமைந்துள்ள இந்த ஆசிரமம், சுமார் 200 அப்யாசிகள் தங்குவதற்கான அடிப்படை வசதிகளைக் கொண்டுள்ளது. குல்பர்கா கட்டிடநிபுணர் ஸ்ரீ.L.T.சவான் அவர்கள் கருத்துப்படி, இரண்டு உயர்ந்த கைகள் உடைய கட்டிடத்தின் முகப்பானது, நம் ஆன்மீகக் குறிக்கோள் மற்றும் முடிவற்ற நிலையை நோக்கிய நம் பயணத்தைக் குறிப்பதாக உள்ளது.

ஜனவரி 16, 1970ம் ஆண்டு, பாபுஜி மகாராஜ் அவர்கள் அடிக்கல் நாட்டியதால், ஆசிரமமானது தனித்தன்மையான அருளால் நிரம்பி இருப்பது போல் உள்ளது.

28300ச.அடி (195' * 145') நிலப்பரப்பில் ஆசிரமம் அமைந்துள்ளது. கட்டிடத்தின் அடிப்பரப்பு சுமார் 140' * 100' ச.அடி உள்ளது. இது தேவைக்கும், பொருளாதார நிலைக்கும் ஏற்ப படிப்படியாகக் கட்டப்பட்ட ஆசிரமமாகும்.

திடமான கறுப்புக்கற்களால் ஆசிரமம் கட்டப்பட்டுள்ளதுடன், பலமான சுற்றுச்சுவரால் அனைத்து இடமும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது.

70ம் வருடத்தில், மிஷனுக்கு இருந்த சில பெரிய நிலங்களில் இதுவும் ஒன்றாகும். 70' * 30' பரப்பில் உள்ள பெரிய தியானக்கூடம், மிகவும் திடமான, எளிதில் விரியாத, சிறந்த தொழில் நுட்பத்துடன் கூடிய உத்தரங்களால் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கூடத்தின் ஒருபக்கத்தில் உயர்ந்த மேடை ஒன்றும் மறுபக்கத்தின் மேலே, தனித்தன்மையான ஒரு மாடமும் உள்ளது. ஆசிரமத்தில் பல அறைகளும், ஒரு தங்கும் கூடமும் உள்ளன. தற்சமயம், தங்கும்கூடமானது, மாஸ்டர் தங்குவதற்கான குளிப்பறை இணைந்த அறையாகவும், மற்றும் அவர் மட்டும் உபயோகிக்க சிறிய உணவருந்தும் கூடமாகவும், புதிதாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

தனியாக ஒரு உணவுக்கூடம், சமையலறை மற்றும் அப்யாசிகள் பெருமளவில் கூடும்போது சமைக்கப் போதுமான இடம் வெளியிலும் உள்ளன. சகோதர சகோதரியருக்குத் தனித்தனியே கழிவறைகள் உள்ளன.

ஆசிரமத்தின் முன்பாகப் புல்வெளியும், பக்கங்களில் தோட்டமும் உள்ளன. பின்கட்டில் மேலும் ஆசிரமத்தை விரிவாக்கவும், திறந்தவெளியில் உணவு உண்ணவும் போதுமான இடமும் உள்ளது.

ரெய்ச்சூர், மாணிக்பிரபு கோவில் தெருவில், LVD கல்லூரி அருகில் ஆசிரமம் அமைந்துள்ளது. மும்பை-சென்னை மற்றும் பெங்களூரு-மும்பை ரயில் வழியில் ரெய்ச்சூர் இருப்பதால், அந்நகரமானது, ரயில், பேருந்து மூலம் சிறந்த முறையில் இணைக்கப்பட்டு உள்ளது. பேருந்து மற்றும் ரயில் நிலையத்தில் இருந்து சுமார் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஆசிரமத்தைச் சுற்றிலும் பல கல்வி நிறுவனங்கள் உள்ளன.

பல பயிற்சி நிகழ்ச்சிகள், பண்டாராக்கள் நடைபெறும் மையமாக ஆசிரமம் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.





### ஜம்மு காஷ்மீரில் ஆசிரமப்பதிவு

மாஸ்டரின் ஆசியினால், 'ஸ்ரீ ராம்சந்த்ர மிஷன் ஜம்மு-காஷ்மீர்', அம்மாநிலத்தில் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

'The Spiritual Hierarchy Publication Trust' ஆனது, கீழ்க்கண்ட பொறுப்பாளர்களைக் கொண்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விஜய் குமார் பட்டர் - தலைமைப் பொறுப்பாளர்

ராஜேஷ் ராதோட் - செயலர்

ப்ரவீன் தக்தீ - பொருளாளர்

சந்தோஷ் குமார் காஞ்சி - பொறுப்பாளர்

சகோ. உமா பிரபு - பொறுப்பாளர்

SRCM மற்றும் SMSF இரண்டிலும் மார்ச் 31, 2009 முதல் எல்லா வெளியீட்டு நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டுவிட்டன. 'The Spiritual Hierarchy Publication Trust' என்ற இந்த புது நிறுவனமானது மிஷன் மற்றும் பவுண்டேஷன் அனுமதியுடன் அனைத்து வெளியீடுகளையும் ஏற்றுக்கொள்ளும்.

**To subscribe to this Newsletter please visit http://www.srcm.org/centers/as/in/newsletter/index.jsp**
**For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved.
"Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.
This Newsletter is intended exclusively for the members of SRCM.